1999 மார்ச் 31] [திரு. ப. ரங்கநாதன்]

பேசியதையே நானும் பேசியதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் சேலம் சென்று ஒரு தொழிற்சாலை திறப்பு விழாவிலே கலந்துகொள்வதற்கான எண்ணத்துடன், இரவு படுக்கைக்குச் சென்ற நான், விடியற்காலை 4½ மணியளவில் புலனாய்வுத் துறை I.G.-யால் மிகுந்த அவசரமான செய்தி என்று பரபரப்போடு எழுப்பப்பட்டு, சென்னையை அடுத்துள்ள செங்குன்றம் ஏரிக்கரை உடையும் அபாயத்திலே இருப்பதாகவும், அதன் காரணமாக, சென்னையும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம் என்றும் சொன்னவுடன் மிகவும் அதிர்ச்சி அடைந்து, உடனடியாக தலைமைச் செயலாளரோடும், காவல் துறை அதிகாரிகளோடும், பொதுப்பணித் துறை அதிகாரிகளோடும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரோடும் தொடர்பு கொண்டு உடனடியாக எச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ளும்படியும், தாழ்வான பகுதிகளிலே உள்ள மக்களை எல்லாம் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லும்படியும் கூறியதோடு ஐந்தே கால் மணியளவிலே தலைமைச் செயலகத்திற்கு வந்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தகவலை வழங்கி, தங்களுக்கும் தகவலை வழங்கி, அதன் பின்னர், அமைச்சர்கள் திரு. ஆற்காடு வீராசாமி, திரு. கோ.சி. மணி, சென்னை மாநகர மேயர், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர் ஆகியோரோடு தலைமைச் செயலகத்திலே அவசரக் கூட்டம் நடத்தினேன். அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு. சுந்தரம் அவர்கள் உடனடியாக, உடைப்பு ஏற்பட்ட இடத்திற்குச் சென்று, அங்கிருந்து எனக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார்.

செங்குன்றம் ஏரியில் நேற்று இரவு 10 மணியளவில் புழல்-அம்பத்தூர் சாலையில் வேலம்மாள் பாலிடெக்னிக் கட்டடத்திற்கும் செங்குன்றத்திலே உள்ள சென்னை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடையே 30 அடி அகலமும், 25 அடி ஆழமுமான உடைப்பு ஏரிக்கரையில் ஏற்பட்டு இருக்கிறது. உடைப்பினுடைய அளவைச் சொன்னேன்; 30 அடி அகலம், 25 அடி ஆழம். இந்த உடைப்பு ஏற்பட்டபோது ஏரியில் அதன் கொள்ளளவான 300 கோடி கன அடி தண்ணீர் முழுவதுமாக ஏரியில் நிரம்பி இருந்தது. இரவு உடனடியாக அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து, பக்கத்திலே உள்ள காவாங்குளம், குளத்தூர், லட்சுமிபுரம், தணிகாசலம் நகர், கொடுங்கையூர் ஆகிய ஊர்களிலே உள்ள மக்களுக்கு

எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இரவு துவக்கத்தில் சிறு கசிவு என்ற நிலையிலே இருந்ததால், பெரிய அளவில் இது பாதிப்பு ஏற்படாது என்று அதிகாரிகள் எனக்கு எல்லாம் அப்போது தெரிவிக்காமல் இருந்துள்ளார்கள். அதன் பின்னர்தான், நள்ளிரவுக்கு மேல் உடைப்பு ஏற்பட்டவுடன் தெரிவித்தார்கள். பொதுப்பணித் துறை அதிகாரிகள், சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் எல்லாம் அனைத்து நடவடிக்கைகளையும் அந்த உடைப்பை அடைப்பதற்காக மேற்கொண்டு உள்ளார்கள். பாதிப்பு பெரிய அளவிலே நேரிட்டு இருந்தால், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்திற்குச் சொல்லப்பட்டு அவர்களும் தயார் நிலையிலே வைக்கப்பட்டார்கள்.

தலைமைச் செயலகத்தில் இருந்து காலை 7 மணியளவில் நானும் அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும் நேராக செங்குன்றம் சென்று உடைப்பு எடுத்த இடத்தைப் பார்வையிட்டோம். உடைப்பு எடுத்த இடத்தைப் பார்த்தபோது, சென்னைக்கு ஏற்பட இருந்த மாபெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பது நன்றாகத் தெரிந்தது. ஏரியின் கரை, ஒரு ஆறு அளவுக்கு இடையிலே உடைந்துள்ள நிலையிலே உள்ளது. ஏரியிலே உள்ள உபரித் தண்ணீரை உடனடியாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடைப்பு ஏற்பட்ட, தண்ணீர் வெளியே வந்த இடத்தில், தண்ணீர் வெளியேற்றம் இப்போது பெரிதும் குறைந்துவிட்டது. சென்னை, திருவள்ளூர் மாவட்டக் காவல் துறையினர், D.G.P. சென்னை மாநகர ஆணையர் ஆகியோர் தலைமையில் அந்த இடத்திலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

முற்பகல் 10-30

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையில் குடிநீர் வாரிய அதிகாரிகளும், பொதுப்பணித் துறை அதிகாரிகளும் அந்த உடைப்பை அடைப்பதற்கான போர்க்கால நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளார்கள். தமிழக அமைச்சர்கள் திரு. தா. கிருட்டிணன், திரு. கு. பிச்சாண்டி, திரு. ஐ. பெரியசாமி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. புரசை ரங்கநாதன், திரு. செங்கை சிவம், திரு. திருவொற்றியூர் விஜயன், அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. ஆரூண் ஆகியோர், நான் அங்கே சென்றபோது, அங்கே இருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1999 மார்ச் 31] [கலைஞர் மு. கருணாநிதி]

மற்றொன்று, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மாமனார் நேற்றையதினம் காலமாகிவிட்டார். அங்கு சென்றிருந்த அமைச்சர் அதையும் பொருட்படுத்தாமல் சென்னைக்கு வந்து கொண்டிருந்தபோது, நான் அவருடன் செல் போனிலே இராணிப்பேட்டை அருகே தொடர்பு கொண்டு, வரவேண்டாம் என்று தடுத்து, திருப்பி அனுப்பிவிட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உடைப்பின் காரணமாக, சென்னை மாநகருக்கு ஏற்படவிருந்த பேராபத்து, அரசு மேற்கொண்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகத் தவிர்க்கப்பட்டதோடு, வருங்காலத்தில் சென்னை மாநகருக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படாத அளவிற்கும் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோடைக் காலத்தில் இப்படி ஓர் உடைப்பு ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிந்தீர்களா அல்லது வேறு ஏதாவது சதிபோன்று இருக்குமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருடைய அந்த ஐயப்பாட்டிற்கு, உடனடியாக திடீரென்று நான் எந்த விளக்கத்தையும் அவசரப்பட்டு அளிக்க விரும்பவில்லை. அது பற்றி விசாரணை நடத்தித்தான், பிறகு தெரிவிக்க முடியும்.

4. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 1999-2000, பேரவையில் முன்மொழிவது குறித்த ஆளுநரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1999-2000* ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for grants for the financial year 1999-2000".